# திருவள்ளுவர் சுட்டிய சமுதாய உணர்வுகள்

3

**மு.சக்தி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை**

**ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, அண்ணா நகர், சென்னை - 600 040**

**மின்னஞ்சல் :** sakthi984m@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்** :

தற்காலத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு குறைந்துவிட்டது. மனிதநேய உணர்வும் குறைந்துவிட்டது.வேளாண்மையில் ஈடுபடும் மக்களின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. நட்புகள் கூட உண்மையானதாக இல்லை. கல்வியின் முக்கியத்துவத்தையும் மனிதர்கள் உணர வேண்டும். ஆகவே இவ்வுணர்வுகளில் மக்களை ஈடுபட செய்து மேன்மையுறச் செய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது .

**ஆய்வு நோக்கம்** :

கி.பி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் தம் உணர்வுகளைச் சமுதாய கருத்துகளாக உணர்த்தியுள்ளார். தம் கருத்துகளை விருந்தோம்பல், மழை, வேளாண்மை, மனிதநேயம், கல்வி, மதச்சார்பின்மை ஆகிய தலைப்புகளின் மூலம் உணர்த்தியுள்ளார். இவ் உணர்வுகள் சமகால சமூகத்திற்கு தேவைப்படுவதால் இக்கருத்துகளை மக்கள் உள்வாங்கும் விதமாக எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும் .

**திறவுச்சொற்கள்:**

அமிழ்தம், தாளாண்மை, திருமகள், களர்நிலம்

**முன்னுரை**

மனித வாழ்வின் அனைத்து உணர்வுகளையும் ஒட்டுமொத்தமாக கூறும் நூல் திருக்குறள். பெரியாரைக் கவர்ந்த ஒரே அற நூலும் இந்நூலே. இத்தகைய சிறப்பு வாய்ந்த குறளில் வள்ளுவர் சுட்டிய சமுதாய உணர்வுகளை இக்கட்டுரையில் காண்போம்.

**உணர்வு வரையறை**

உணர்வு என்பது ஓர் உயிரினத்தால் உணர்வுக்காகப் பயன்படுத்தப்படும் ஓர் உயிரியல் அமைப்பு (இணையம்). உணர்வுகளைத் தொல்காப்பியர் "மெய்ப்பாடு" என்கிறார்.

**சமுதாய உணர்வுகள்**

1. மழை உணர்த்தும் சமுதாய கருத்துகள்
2. விருந்தோம்பல்
3. மனிதநேயம் பேணும் வள்ளுவம்
4. கல்வியில் சமத்துவம்
5. வேளாண்மை
6. அரசியலில் சமத்துவம்
7. மதச்சார்பின்மை

**மழை உணர்த்தும் சமுதாய கருத்துகள்**

இவ்வுலகில் மழை இல்லாமல் எந்த உயிரினமும் வாழ முடியாது. அவ்வாறான மழையைப் பற்றி "வான் சிறப்பு" எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். தனக்கு நன்மை செய்த இயற்கையை வழிபட்ட ஆதி மனிதனின் நிலையைக் காட்டுகிறது .

மழையை வள்ளுவர், "அமர வாழ்வுத்தரும் அமிழ்தம்" (குறள்.11) என்று உணர வேண்டும் என்கிறார். இளங்கோவடிகளும் மழையின் சிறப்பை உணர்த்தவே தாம் இயற்றிய சிலம்பில் கடவுள் வாழ்த்தாக முதலில் மழையை குறிப்பிடுகிறார்.

**மாமழை போற்றுதும்**

**மாமழை போற்றுதும்** (சிலம்பு)

இச்சமுதாயம் நீரை நம்பி வாழ்கிறது எனவே தொடர்ந்து பஞ்சம் நிலவினால் மக்கள் ஒழுக்கத்திற்கும் பஞ்சம் வந்துவிடும்.

**மாரியுமுண்டு ஈங்கு உலகுப் புரப்பதுவே** (புறம்.107)

இவ்வாறு திருவள்ளுவர் மழையின் முக்கியத்துவத்தை உணர்வுகளாகச் செதுக்கி உள்ளார்.

**விருந்தோம்பல்**

பழம்பெரும் நாடாகிய நம் நாட்டில் விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பாடாக இருந்து வருகிறது. விருந்தினன் ஒருவன் இல்லத்தின் வெளியே நிற்க தான் மட்டும் உண்ணும் உணவு நஞ்சு போன்றது என்கிறார் வள்ளுவர். (குறள்.82) நாலடியாரில் தாளாண்மை எனும் அதிகாரம் விருந்தோம்பல் பற்றிக் கூறுகிறது (பா.3). விருந்தினர் குறித்து ஆசாரக்கோவை,

**முறுவல் இனிதுரை** (பா.54)

என்ற பாடலில் விருந்தோம்பல் பற்றிப் பேசும் சொற்களைச் சுட்டுகின்றது நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவருடைய வீட்டில் திருமகள் தங்குவாள் என்று

வள்ளுவர் குறிப்பிடுவதன் மூலம் நாம் விருந்தினர் வரும்போது முகம் கோணாமல் அன்பாக உபசரிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது (குறள்.84). இவ்வாறு விருந்தோம்பல் என்பது சமுதாய உணர்வில் முக்கிய உணர்வாக வள்ளுவத்தில் இடம் பெற்றுள்ளது.

**மனிதநேயம் பேணும் வள்ளுவம்**

"மனிதநேயம்" என்ற சொல்லுக்கு மனிதர்கள் மற்ற மனிதரிடம் காட்டும் அன்பு என்று பொருள். திருக்குறளில் அறத்துப்பால்,பொருட்பால், இன்பத்துப்பால் ஆகிய மூன்றிலும் மனிதநேய சிந்தனைகளைச் சுட்டுகிறார் வள்ளுவர். மக்கள் அனைவரும் பிறப்பினால் சமம் என்பதை, **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்** (குறள்.972) என்று குறிப்பிடுகிறது.

ஆடை கலையும்போது கை தானே சென்று உதவுவதுபோல ஆபத்தில் உதவுபவனே சிறந்த நண்பன் (குறள்.788) என்று நட்பின் மூலமும் மனிதநேய கருத்துகளை விளக்குகிறார் வள்ளுவர்.

**கல்வியில் சமத்துவம்**

இன்றைய சமுதாயத்தில் கல்வி ஒரு சிறந்த வேலை வாய்ப்பினை வழங்கவும், மாணவர்களின் அறிவினைக் கூர்மைப்படுத்தும் கருவியாகவும் விளங்குகிறது.

"கல்வி இல்லாப் பெண்கள் களர் நிலம் போன்றவர்" என்றார் பாரதிதாசன். ஆனால் நம் வள்ளுவர், கல்லாதவன் மிக்க அழகுடையவனாக இருந்தாலும் அவன் அழகு மண்ணால் செய்யப்பட்ட பொம்மையின் அழகுக்கு ஒப்பாகும் என்கிறார் (குறள்.407).

ஒருவன் ஒரு தலைமுறையில் கற்கும் கல்வி அவனுக்கு ஏழேழு பிறவிகளிலும் கூடவே சென்று உதவும் என்று அழகாகச் சுட்டியுள்ளார் (குறள்.398,391). வள்ளுவர், கல்வியைக் கற்று அறியாமையை நீக்கி அந்த அறிவின்படி வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்கிறார்.

மனிதனுக்கு கல்விதான் அனைத்து செல்வங்களையும், பண்பாடுகளையும், அழகினையும் தருகிறது. அதனால்தான் நம் பொய்யாமொழிப் புலவர், கல்வியறிவு பெற்ற மக்களை "மனிதர்கள்" என்றும், கல்வியறிவு இல்லாதவர்களை விலங்குகள் என்றும்(குறள்.410) குறிப்பிடுகின்றார்.

"கல்வி அழகே அழகு" என்று கல்வியின் அழகை நாலடியார்(பா.131) குறிப்பிடுகிறது.

**வேளாண்மையில் சமுதாயம்**

உணவுக்கு அடிப்படை வேளாண்மை. உழவு எனும் அதிகாரத்தில் வேளாண்மை கருத்துகளைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். உழவனே உலகின் உயிர். அரசனே உழவருக்கு அடுத்த படிநிலை தான் என்று (குறள்.1034 ) குறிப்பிடுகிறார்.

இந்த உலகமே ஏர்த்தொழிலின் பின்னே சுழல்கிறது என்பதன் மூலம் வேளாண்மையில் சமுதாயக் கருத்துகளை உணர்த்துகிறார்(குறள்.1031)

**அரசியலில் சமுதாயச் சிந்தனைகள்**

அரசின் கீழ் இயங்கும் நாடானது பசி இல்லாமலும், பிணி இல்லாமலும், பகை இல்லாமலும், இருத்தலே நலம். மற்ற நாடுகளுடன் பகை கொள்ளாது அமைதியை விரும்பும் நாடாகவும் இருப்பதே சிறந்த நாடு என வள்ளுவர் குறிப்பிடுகிறார்(குறள்.734). நாட்டை ஆளும் அரசன் நீதி முறை தவறாது ஆள்பவனாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அவன் மக்களால் இறைவனாக மதிக்கப்படுவான்(குறள்.388).

**மதச்சார்பின்மை உணர்த்தும் சமுதாய கருத்துகள்**

திருக்குறள் இனம், மதம், நாடு, மொழி எனும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்தும் ஒரு நூலாக விளங்குகிறது.

திருக்குறள் ஒரு மதத்தினருக்கும், ஒரு நிறத்தினருக்கும், ஒரு மொழிக்கும் உரியதன்று; அது உலகுக்குரியது என்பர் திரு.வி.க.

முதல் குறளே "அ" கரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. இவ்வுலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டது என்று எந்த மதத்தையும் குறிப்பிடாமல் கடவுளை மட்டும் முன்னிலைப்படுத்தும் கருத்தை இங்கு அறிய முடிகிறது. இவ்வாறு மதத்திலும் சமுதாய கருத்துகளை வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

திருவள்ளுவரின் சமுதாய சிந்தனைகள் நம் உணர்வுகளைத் தூண்டும் அழியாப் பெட்டகமாக உள்ளது. திருக்குறளில் பல சிந்தனைகள் கொட்டிக்கிடந்தாலும் அழியாக் கல்வெட்டாக இருப்பது சமுதாயக்கருத்துகளே என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த சமுதாயக் கருத்துகளை உள்ளடக்கியதால் இது உலகப் பொதுமறையாக விளங்குகிறது.

**துணை நூல் பட்டியல்**

1. அறவாணன். க.ப., திருக்குறள், தமிழ்க்கோட்டம், சென்னை.
2. இராசாராம்.துரை., பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், முல்லை நிலையம், சென்னை.
3. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. புலியூர்கேசிகன், சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை.